www.freetnbooks.com

| 7 - STD | இரண்டாம் பருவ நிறைவுத் தொகுத்தறித் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 2.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 60 |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக** **10 x 1 = 10**

1. சங்கம வம்சத்தின் மிகச் சிறந்த ஆட்சியாளர் யார்?
   அ) புக்கர் ஆ) இரண்டாம் தேவராயர் இ) ஹரிஹரர் -II ஈ) கிருஷ்ணதேவராயர்
2. மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக் கொண்டு வந்தவர் யார்?
   அ) சாளுவ நரசிம்மர் ஆ) இரண்டாம் தேவராயர்
   இ) குமார கம்பண்ணா ஈ) திருமலை தேவராயர்
3. ஷெர்ஷா டெல்லியில் யாருடைய அரண்மனையை அழித்தார்?
   அ) பாபர் ஆ) ஹுமாயூன் இ) இப்ராஹிம் லோடி ஈ) ஆலம்கான்
4. அக்பரின் வருவாய்த்துறை அமைச்சர் யார்?
   அ) பீர்பால் ஆ) ராஜா பகவன்தாஸ் இ) ராஜா தோடர்மால் ஈ) ராஜா மான்சிங்
5. சிவாஜியின் ஆசிரியராகவும் மற்றும் பாதுகாவலராகவும் இருந்தவர் யார்?
   அ) தாதாஜி கொண்டதேவ் ஆ) கவிசாஸ் இ) ஜீஜாபாய் ஈ) ராம்தாஸ்
6. குஜராத் மற்றும் மாளவத்தை முகலாய ஆதிக்கத்திலிருந்து விடுபட அவர்களுக்கு எதிராக போரை அறிவித்தவர் யார்?
   அ) பாலாஜி விஸ்வநாத் ஆ) பாஜிராவ் இ) பாலாஜி பாஜிராவ் ஈ) ஷாகு
7. மனிதனால் முதலில் அணியப்பட்டு பயன்படுத்தப்பட்ட உலோகங்களில் ஒன்று?
   அ) இரும்பு ஆ) தாமிரம் இ) தங்கம் ஈ) வெள்ளி
8. பின்வருவனவற்றில் இந்தியாவில் இல்லாத பறவைகள் சரணாலயம் எது?
   அ) குஜராத்திலுள்ள நல்சரோவர் ஆ) தமிழ்நாட்டிலுள்ள கூந்தன்குளம்
   இ) ராஜஸ்தானிலுள்ள பாரத்பூர் ஈ) மத்திய பிரதேசத்திலுள்ள கன்ஹா
9. மாநில அரசு நிருவாகத்தின் ஒட்டுமொத்த தலைவர் யார்?
   அ) குடியரசுத் தலைவர் ஆ) பிரதமர் இ) ஆளுநர் ஈ) முதலமைச்சர்
10. கீழ்க்கண்டவற்றில் அச்சு ஊடகத்தின் கீழ் வருவது எது?
    அ) வானொலி ஆ) தொலைக்காட்சி இ) செய்தித்தாள் ஈ) இணையதளம்

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக** **7 x 1 = 7**

11. விஜயநகரப் பேரரசர்களால் வெளியிடப்பட்ட தங்க நாணயங்களுக்கு ________ என்று பெயர்.
12. அக்பரால் மிகவும் போற்றப்பட்ட சூபிதுறவி ________
13. மகாராஷ்டிராவில் பரவிய ________ இயக்கம் மராத்திய மக்களிடையே விழிப்புணர்வும் இணக்கமும் ஏற்பட உதவியது.
14. தமிழ்நாட்டில் இரும்புத் தாதுக்கள் காணப்படும் இடம் ________.
15. 'காஸ்ட்ரோனமி' (Gastronomy) என்பது சுற்றுலாவின் ________ அம்சத்தைக் குறிக்கின்றது.
16. மாநில அரசின் உச்சபட்ச நீதி அமைப்பு ________.
17. உலகத்தினை சிறியதாகவும், மிக அருகாமையிலும் கொண்டு வந்தது ________.

**III. பொருத்துக** **5 x 1 = 5**

18. விஜய நகரா - பெட்ரோலியம்
19. தீன்-இலாஹி - கோவா
20. புதைபடிவ எரிபொருள் - தலைமைச் செயலகம்
21. அகுதா கடற்கரை - அக்பர்
22. புனித ஜார்ஜ் கோட்டை - வெற்றியின் நகரம்



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

**IV. சரியா? தவறா?** **5 x 1 = 5**

23. அஷ்டதிக்கஜத்தில் அல்லசானி பெத்தண்ணா குறிப்பிட தகுந்தவராவார்.
24. இருபது ஆண்டுகள் அட்சி செய்து கிருஷ்ணதேவராயர் சங்கம வம்சத்தின் மிகச்சிறந்த அரசராவார்.
25. பாபர் மத்திய ஆசியாவில் ஒரு சிறிய அரசான பர்கானாவைப் பரம்பரைச் சொத்தாகப் பெற்றார்.
26. சிவாஜி புரந்தரை முகலாயர்களிடமிருந்து கைப்பற்றினார்.
27. தேஷ்முக்குகள் கிராமங்களில் வாழ்ந்தனர். அவர்கள் 20 முதல் 200 வரையிலான கிராமங்களில் தங்களின் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர்.

**V. கூற்று, காரணம் கூறுக** **3 x 1 = 3**

28. **கூற்று:** ஆங்கிலேயர் தங்களது முதல் வணிக மையத்தை சூரத்தில் துவங்கினர்.
**காரணம்:** ஜஹாங்கீர் ஆங்கிலேயருக்கு வணிக உரிமையை வழங்கினார்.
அ) காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
ஆ) காரணம் கூற்றிற்கான தவறான விளக்கம்
இ) கூற்று மற்றும் காரணம் சரி ஈ) கூற்று மற்றும் காரணம் தவறு

29. **வாக்கியம் I:** செய்திப் பரிமாற்றக் கடிதங்கள் அடங்கிய கோப்புகளையும், கணக்குப் பதிவேடுகளையும் மதிப்பீடு செய்கையில் ஆவணங்களைத் துல்லியமாகப் பராமரிப்பதில் பேஷ்வாக்கள் கவனமுடன் இருந்தனர்.
**வாக்கியம் II:** இரண்டாம் பானிப்பட் போரில் பீரங்கிப்படை முக்கியத்துவம் பெற்றிருந்தது.
அ) I சரி ஆ) II சரி இ) I மற்றும் II சரி ஈ) I மற்றும் II தவறு

30. **கூற்று:** காற்றாற்றல் ஒரு தூய்மையான ஆற்றல்.
**காரணம்:** காற்று விசைலிகள் எந்த உமிழ்வையும் உற்பத்தி செய்யாது.
அ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை வளக்குகிறது.
ஆ) கூற்று மற்றும் காரணம் சரி, காரணம் கூற்றை விளக்கவில்லை
இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) கூற்று காரணம் இரண்டும் தவறு

**VI. ஒன்று அல்லது இரண்டு வாக்கியங்களில் விடையளி** **5 x 2 = 10**

31. விஜயநகரப் பேரரசின் நான்கு வம்சங்களின் மிகச் சிறந்த ஆட்சியாளர்களை எழுதுக.
32. மன்சப்தாரி முறையைப் பற்றிக் குறிப்பு வரைக.
33. மராத்தியர்களிடத்தில் பக்தி இயக்கத்தின் தாக்கம் என்ன?
34. கார்பன் அளவின் அடிப்படையில் நிலக்கரியின் வகைகளைக் கூறு.
35. வேறுபடுத்துக: பன்னாட்டுச் சுற்றுலா மற்றும் வரலாற்றுச் சுற்றுலா.
36. தமிழ்நாட்டிலுள்ள ஏதேனும் ஐந்து கடற்கரைகளின் பெயர்களை எழுதுக.
37. ஊடகம் என்றால் என்ன?

**VII. விரிவாக விடையளிக்கவும் (ஏதேனும் மூன்று வினாக்களுக்கு)** **3 x 5 = 15**

38. கிருஷ்ண தேவராயரின் பணிகள் மற்றும் சாதனைகளைக் குறிப்பிடுக.
39. புதுப்பிக்கக் கூடிய வளங்களின் வெவ்வேறு வகைகளை விளக்குக.
40. சுற்றுலாவின் புவியியல் காரணிகளை விளக்குக.
41. ஊடகத்தை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
42. முகலாயர்களின் நிலவருவாய் முறையைப் பற்றி விவரி.


**VIII. இந்தியா வரைபடத்தில் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்** **5 x 1 = 5**

43. 1) இந்தியப் பெருங்கடல் 2) ஆக்ரா 3) டெல்லி 4) வங்காளம் 5) மும்பை



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com




www.freetnbooks.com | FREETNBOOKS
Scanned with Cam